[3rd November 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இத்தகைய தகவல் என்னிடம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : கடற்கரையைப் பிரம்மாண்டமான அலைகள் தாக்குவதாலும், கடலுக்கடியிலுள்ள பள்ளத்தாக்குகளில் ஏற்படும் மாறுதல்களாலும் இந்த அதிர்ச்சிகள் நிகழலாம். இந்த அதிர்ச்சிக்கான உண்மைக் காரணங்கள் விஞ்ஞான ரீதியில் கண்டறியப்படும், என்று அறிக்கையில் இருக்கிறது. பல மாதங்கள் ஆகியும் அதிர்ச்சி ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று கண்டு பிடிப்பதற்கு இவ்வளவு காலதாமதம் ஏன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதையெல்லாம் பரிசீலனை செய்பவர்கள் காலவரம்பு வைத்துக்கொண்டு செய்யமுடியாது. ஆனால் ஒரு உறுதி கூறப்பட்டிருக்கிறது. இந்த நில அதிர்ச்சியினால் பரபரப்பிற்கு ஒன்றும் இல்லை, அபாயம் ஒன்றும் இல்லை, என்று சொல்லப்படுகிறது.

SRI V. SANKARAN : Sir, it is stated in the statement laid on the Table of the House that 'The State Government are also arranging for an official of the Meteorological Department to be posted at Tambaram for personally studying the phenomenon and submit the scientific reports to the Director of the Regional Meteorological Centre, Madras'. May I know whether this official has been posted by the State Government, if so, whether he has studied the phenomenon and submitted a scientific report and if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is under the consideration of the Government.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், இந்த நில அதிர்ச்சியினால் ஏதாவது கட்டடங்களுக்குச் சேதம் ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

SRI V. SANKARAN : Sir, it is also stated in the statement laid on the Table of the House that 'The possible causes for such tremors would be scientifically studied'. May I know whether the Government have taken any steps to scientifically study the possible causes for such tremors?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is being done by the concerned experts.

### கச்சத் தீவு

*342 கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. கரு. சீமைச்சாமி : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள கச்சத் தீவிற்கு இந்திய மீனவர்கள் செல்வது இலங்கைப் போலீஸாரால் தடைசெய்யப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

3rd November 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is not in public interest to answer the question.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் சபாநாயகர் அவர்களே, கச்சத் தீவு. . .

MR. SPEAKER : " It is not in public interest to answer the question " என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறினர்கள். ஆகவே, அந்த விவரத்திற்குள் கனம் அங்கத்தினர் போகக்கூடாது.

திரு. செ. மாதவன் : கச்சத்தீவு யாருக்குப் பாத்தியம் என்பதை வேண்டுமானால் சொல்லாமல் இருக்கலாம். ஆனால் அங்கே செல்லக்கூடியவர்கள் பலாத்காரமாகத் தடுக்கப்படுகிறார்களே, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதெல்லாம் இந்த அரசாங் கத்திற்கும் வேறொரு அரசாங்கத்திற்கும் உள்ள கடிதப்போக்கு வரத்து சம்பந்தப்பட்டது. அதையெல்லாம் விவரமாகச் சொல் லுவது நல்லதல்ல என்று நினைக்கிறேன்.

### Theft of idols

*343 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any report has been received recently regarding the theft of three valuable bronze idols from the Perumal Temple at Karuvankurichi near Vaduvur, in Mannargudi taluk; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) · The Inspector, Hindu Religious and Charitable Endowments, Needamangalam, has reported that the following three idols were stolen on 4th March 1966 night—

(1) Perumal (Varadarajar) idol 2 feet height—Value Rs. 100.

(2) Sri Devi idol 1½ feet height—Value Rs. 100.

(3) Sri Boodevi idol 1½ feet height—Value Rs. 75.

A complaint has been lodged with Vaduvur Police Station and the matter is under investigation.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி கடந்த ஒன்றிரண்டு ஆண்டு களாகவே ஒரு சில கோவில்களில் இருந்து விக்கிரகங்களெல்லாம் திருட்டுப் போய்க்கொண்டு வருகிறது. இம்மாதிரி இனிமே லாவது திருட்டுகள் ஏற்படாமல், பந்தோபஸ்து செய்வதற்கு முன் ஏற்பாடுகள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு சொத்து என்று இருந் தால் திருடக்கூடியவர்கள் இருப்பார்கள். திருட்டைத் தடுப் பதற்கு அந்தந்த ஸ்தாபனங்கள் என்னென்ன செய்யவேண்டுமோ, அது கவனிக்கப்பட்டு வருகிறது.